மாயூரத்திற்குப் புதிய பெயர்.

அரிசி கிடைக்கிறது. அதாவது அவுட் டர்ன் அதிகமாக வருகிறது. அதனால் அதை மற்ற மாவட்டங்களுக்குங்கூடப் பரப்பலாம் என்ற கருத்தைத் தெரிவித்தேன்.

* 620 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரத்தின் தற்போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி 1973 ஆகஸ்டு மாதத்தில் தனது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரத்தின் தற் போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி அதனுடைய எண். 285, 3—8—73 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருக்கிறது. மாயூரம் நகராட்சி அதுகுறித்து பொதுமக்களுடைய ஆட்சேபணை கேட்கப்படவில்லை என்று கூறி யிருக்கிறது. வருவாய்த் துறை ஏடுகளிலே பெயர் மாற்றத்தைப் பதிவுசெய்யவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றிக் கருத்துரை வழங்குமாறு கேட்கப் பட்டிருக்கிறார். அதுபற்றி அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பல ஊர்களுடைய பெயர்கள் பண்டைக் காலத்தையொட்டி அமைந்த பெயர்களாக இருக் கின்றன, அப்பொழுது இடப்பட்ட பெயர்கள் இன்றைய மக்களின் சிந்தனைக்கும் கருத்துக்கும் பொருத்தமாக இல்லாத காரணத் தினால்—சில ஊர்களினுடைய பெயர்கள் காலத்தால் திரிந்தும் வேறு பெயர் மாறியும் இருக்கின்ற காரணத்தினால்—உதாரணத் திற்குச் சொல்லவேண்டுமானால் எனது பகுதியாகிய பள்ளப்பட்டி என்ற பெயரை எடுத்துக்கொள்ளலாம், இந்தக் காலத்து மக்களின் கருத்துக்கும், சிந்தனைக்கும் கௌரவத்திற்கும் உகந்ததாக இல்லை. அப்படி உள்ள இடங்களிலே எல்லாம் மொத்தமாக—ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ஊருக்கும் பெயர்மாற்றம் செய்வதால் வருவாய்த் துறைக்கு அதிக செலவாகும் என்ற காரணத்தினால்

1974 மார்ச் 26]

பல சிக்கல்கள் ஏற்படக்கூடும்—எந்த எந்த ஊர்களிலிருந்து மக்கள் அந்த அந்த ஊர்களினுடைய பெயர்களை மாற்ற வேண்டுமென்று சொல்கிருர்களோ, அவற்றையெல்லாம் ஒரே தடவையில் மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையாலே என்பது மாறி இன்றைக்கு புதியன கழிதலும் பழையன புகுதலும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பழையவைகள் அனைத்தையுமே நீக்கிவிடாமல் புதிய அனைத்தையுமே எடுத்துக்கொள்ளாமல் அவ்வப்பொழுது பரிசீலித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மதுரை மாநகராட்சிக்குக் கட்டடம்.

*621 வினு—**திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குப் புதிதாகக் கட்டப்படும் கட்டடத்தின் மொத்த மதிப்பீடு என்ன?

(இ) இதுவரையிலும் நடந்து இருக்கும் வேலையின் மதிப்பென்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) மதுரை மாநகராட்சிக்கு புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 70.70 இலட்சம் (ரூபாய் எழுபது லட்சத்து எழுபதினுயிரம்).

(இ) டிசம்பர் 1973 முடிய நடந்து இருக்கும் வேலையின் மதிப்பு ரூபாய் 1,79,735 (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து).

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியினுடைய கட்டிடம் அஸ்திவாரம் இட்ட அளவோடுதான் இருப்பதாகத் தெரிகிறது. ஆனல் அந்தக் கட்டிடத்தை வேகமாக முடிப்பார்கள் என்று மதுரை மாநகரத்து மக்கள் எதிர்பார்க்கிருர்கள். எனவே, அந்தக் கட்டிடத்தைச் சீக்கிரமாக முடிப்பதற்கும், இந்த ஆண்டு முடிவடையும் என்று காலவரையறுத்துச் சொல்வதற்கும் அரசால் இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.